**த. நா.ச.பே. எண் : 035** **நாள் : 14.06.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (14.6.2018) சட்டப்பேரவையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவை விதி 55–ன் கீழ் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வேண்டி அளித்த பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் மீது ஆற்றிய உரை.

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு மேற்கு கிராமத்தைச் சேர்ந்த சித்தன் என்பவரின் மகன் திரு. முருகன் என்பவர், 31.5.2018 அன்று கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த போது, கட்டட விபத்தில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, திரு. முருகன் அவர்களுடைய குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, சு. கீரனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்திரசேகர் என்பவரின் மகள் செல்வி மகாலட்சுமி என்பவர், 7.6.2018 அன்று, பள்ளி கழிவறையில் மயங்கிய நிலையில், மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, செல்வி மகாலட்சுமியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணபுரம் உள் வட்டம், திப்பிரெட்டி அள்ளி தரப்பு குக்கல்மலை கிராமத்தில் 3.6.2018 அன்று திடீரென இடியுடன் கூடிய மழை பெய்த போது, இடி தாக்கியதில், திரு. ராதாகிருஷ்ணன் என்பவரின் மகள் செல்வி. வித்யா என்பவர் உயிரிழந்த செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, இயற்கை பேரிடரில் உயிரிழந்த காரணத்தினால் தற்போதைய நடைமுறைகளின்படி செல்வி வித்யாவின் குடும்பத்திற்கு நான்கு லட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், மாவலிங்கை கிராமத்தைச் சேர்ந்த திரு.சக்திவேல் என்பவரின் மகன் செல்வன் பூபதி மற்றும் திரு. முருகேசன் என்பவரின் மகன் செல்வன் பாரதி ஆகிய இருவரும் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, உயிரிழந்த பூபதி மற்றும் பாரதி ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், புஞ்சை புளியம்பட்டி உள்வட்டம், நல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள ஏரியில் 31.5.2018 அன்று குளிக்கச் சென்ற மாதம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரகுபதி என்பவரின் மகன் ராஜ்குமார், திரு. சுரேஷ் என்பவரின் மகன் கௌதம் மற்றும் திரு. செல்வன் என்பவரின் மகன் சஞ்சய் ஆகிய மூன்று மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அக்குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், சேனங்கோடு, திற்பரப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு. நெல்லையப்பன் என்பவர் மரத்தை வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனையடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அவரது குடும்பத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் குமாரபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. துரைராஜ் என்பவர் 9.6.2018 அன்று வீசிய பலத்த காற்று மற்றும் மழையினால், மின்கம்பி அறுந்து விழுந்து, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; விளவங்கோடு வட்டம், அருமனை கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலஸ் என்பவரின் மகன் திரு. அகஸ்டின் என்பவர், 10.6.2018 அன்று, தனது இரு சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த போது, பலத்த காற்றினால் மரம் முறிந்து, மின்கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஆறுதேசம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கொச்சப்பி என்பவரின் மகன் திரு. பாலையன் என்பவர் **10.6.2018** அன்று பலத்த காற்று மழையினால், அறுந்து கிடந்த மின்கம்பியை கவனிக்காமல் மிதித்ததால், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இச்சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு தற்போதைய நடைமுறைகளின்படி, தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தேவையூர் தெற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. உளியன் என்பவரின் மகன் செல்வராஜ் என்பவர் **10.6.2018** அன்று, இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, முன்னால் சென்று கொண்டிருந்த லாரி மின் கம்பம் மீது உரசி, மின் கம்பம் சாய்ந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அன்னாரின் குடும்பத்திற்கு தற்போதைய நடைமுறைகளின்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், வரகூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்வம் என்பவரின் கூரை வீடு மின் கசிவின் காரணமாக தீப்பற்றி எரிந்ததில், அவருடைய மகள் செல்வி. கீர்த்தி என்பவர் தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன். இவருடைய குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அன்னாரின் குடும்பத்திற்கு தற்போதைய நடைமுறைகளின்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், அனவயல் கிராமத்தைச் சேர்ந்த திரு. விநாயகம் என்பவரின் மகன் திரு. தமிழ்செல்வன் என்பவர் அவரது தோட்டத்தில் உள்ள மரத்தில் ஏறும் போது, மின்சாரம் தாக்கி, உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இவருடைய குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆமூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாராயணசாமி ரெட்டி என்பவரின் மகன் திரு. கண்ணியப்பன் என்பவர் 9.6.2018 அன்று அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அன்னாரின் குடும்பத்திற்கு தற்போதைய நடைமுறைகளின்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**